Koviloor Digital Library

வேதம் முழங்கும்

நாம தர்மம்



ACC No 44650
Q1

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/2

வேதம் முழங்கும் நாமதர்மம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44650

தொகுப்பு
Dr.s.வேணுகோபால்சர்மா

வெளியீடு உதவி
T.R.சுப்ரமண்யம்
(ட்ரஸ்டி - ஸ்ரீ ராம நாம வங்கி)

நன்றி:
கும்பகோணம் S. பஞ்சாபகேச சாஸ்திரிகள்
புதுக்கோட்டை ஸ்வாமிகள்
ஸ்ருதிகளிலிருந்து ஸ்ரீ ராம நாமத்தின் பெருமை
(பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்)

வெளியீடு:
ஸ்ரீ ராம நாம வங்கியின்
பகவன் நாமா பப்ளிகேஷன்ஸ் ,
ராம மந்திரம், 2/3, வினாயகம் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.,
தொலைபேசி : 044 24893736
web:www.namaalayam.org - mail: ramamanthiram@gmail.com

Koviloor Digital Library

TTITLE : VEDAM MUZHANGUM NAMA DHARMAM

AUTHOR : COMPILATION

BOOK SIZE : CROWN

EXTENT : 48PAGES

EDITIONS : 2011

PRICE : 15/-

ஸ்ரீ ராம நாம வங்கியின் பிரசாரப் பிரிவான
ஸ்ரீ ராமஸ்ரீ ராம நாம வங்கியின் பிரசாரப் பிரிவான
ஸ்ரீ ராம நாம வங்கியின் செயல்பாடுகள்: 2011பிப்ரவரி

எழுதுவதற்காக தயாரிக்கப்பட்ட நோட்டுக்கள்	84,64,000+
எழுதியவர்கள்	54,80,000
விநியோகம்	5050 கோடி
எழுதி பெறப்பட்ட நாமங்கள்	4500 கோடி
எழுதிய நாமங்களில் ப்ரதிஷ்டை செய்தவை	4239 கோடி
ப்ரதிஷ்டையான இடங்கள்	101
நாமாலயத்தில்	1008 கோடி
250 கோடிப்ரதிஷ்டை	1
104 கோடிப்ரதிஷ்டை	18
13 கோடிப்ரதிஷ்டை	81
1 கோடிப்ரதிஷ்டை	5
பாதயாத்திரை தூரம்	5640 கி.மி.
ரதயாத்திரை சென்ற தூரம்	30,597கி.மி.
மொத்த யாத்திரை	14
ப்ரதிஷ்டை செய்வதற்காக சென்ற பாதயாத்திரை	6
ப்ரதிஷ்டை செய்வதற்காக சென்ற ரதயாத்திரை	8
மொத்த யாத்திரை தூரம்	36,237 கி.மி.
பாரததேசத்தில் யாத்திரை செய்துள்ள மாநிலங்கள்	18
ப்ரதிஷ்டையான மாநிலங்கள்	10
மற்றவர் செய்த ப்ரதிஷ்டைளுக்கு உதவிய நாமங்கள்	53 கோடி

Koviloor Digital Library

5/2

வேதம் முழங்கும் நாமதர்மம்

பொருளடக்கம்

Koviloor Digital Library

அரியதும், பழையதுமான, க்ரந்தங்களையும், நாமசித்தாந்த விஷயங்களையும் வெளியிடும் பணியில்

ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

நாம ப்ரசாரத்தின் ஓர் அங்கமாகவே ப்ரசுரப் பிரிவு செயல்படுகிறது.இதில் வெளிவந்திருக்கும் நூல்கள் காய்தல் உவத்தல் இன்றி யாரையும் ப்ரமிக்க வைக்கும்.எங்கள் நாம ஸேகரம் பெருகப் பெருக இவைகள் வெளிவந்தன என்பதே உண்மை. இதையே நாம மஹாத்மியமாக பார்ப்பதே எங்களுக்கு உவப்பானது. நாம ப்ரசாரத்தில் ஈடுபடும் மற்றும்உதவிகள் செய்பவர்களுக்கும், எங்கள் புத்தகங்கள் பல ப்ரஸாதமாக வழங்கப்படுகின்றன

RAMA MANTHIRAM, No.2/3, VINAYAGAM STREET,

WEST MAMBALAM, CHENNAI - 600 033. Ph:- 044 24893736.

E-mail : rama@ramanamabank.org / ramamanthiram@gmail.com

Website : www.namalayam.org / www.ramanamabank.org

1.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் - ப்ரதி பதம் - 11 பாகம்	2300/-
2.	ஸ்ரீ மஹாபாரதம் - தமிழ் வசனம் 10 பாகம்	1800/-
3.	ஸ்ரீமத் பாகவதம் - ப்ரதி பத அர்த்தம் - 7 பாகம்	1500/-
4.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் மூலம் தமிழில் -பெரிய எழுத்தில் 2 பாகம்	700/-
5.	ஸ்ரீமத் பாகவதம் வசனம் - 7 பாகம்	600/-
6.	ராமாயண ரசம் - 4 பாகம்	600/-
7.	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் - பெரிய எழுத்தில்	550/-
8.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்- மூலம் தமிழில்	450/-
9.	ஸ்ரீ துளஸீ ராமாயணம்- மூலமும் வசனமும்	350/-
10.	ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்- வசனம்	300/-
11.	ஞானேஸ்வரி	300/-
12.	ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில்	300/-
13.	நாராயணீயம் ப்ரதிபத அர்த்தம்	200/-

Koviloor Digital Library 5/2

14. ஸ்ரீகிருஷ்ண சைதன்யர்	300/-
15. கர்க ஸம்ஹிதை	200/-
16. நந்த நந்தன்	200/-
17. உஜ்ஜ்வல நீலமணி	150/-
18. பார்த்தஸாரதி	140/-
19.ஸ்ரீமத் ராமாயணரஹஸ்யம்	150/-
20. த்வாரிகாதீசன்	100/-
21. பகவான் வாசுதேவன்	100/-
22. திருப்பாவை உபன்யாஸம்	100/-
23.ஸ்ரீபகவன் நாம ரஸோதயம்	100/-
24. பக்த துகாராம் திவ்ய சரித்திரம்	100/-
25. ஸ்ரீ மத் பாகவத கதாம்ருதம்	100/-
26. ஸ்ரீமத் பாகவதம் மூலம் தமிழில் - கையடக்க வடிவில்	100/-
27. ஸ்ரீ ராம தூதனின் சுயசரிதம்	100/-
28. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்-பாசுரங்கள்	60/-
29. கீதகோவிந்தம் ப்ரதிபத அர்த்தம்	60/-
30. ஸ்ரீ ஞானேஸ்வர் திவ்ய சரித்திரம்	60/-
31. ஸ்துதி மணிகள்	60/-
32. ராதே!பருந்தாவனராதே!!	60/-
33. பாதுகா ஸஹஸ்ரம் -பாசுரங்கள்	60/-
34. பிரபு வருகிறார்	60/-
35. ஸ்ரீமத் பகவத் கீதை -ப்ரதி பத அர்த்தம்	60/-
36. நாராயணீயம் -பாசுரங்கள்	50/-
37. ஹரி ஸங்கீர்த்தன மாலா	50/-

Koviloor Digital Library

38.	தர்ம சாஸ்திரம்	50/-
39.	பக்தி பாகீரதி	50/-
40.	ஜய கல்யாண ஸூக்தி லஹரீ	45/-
41.	தக்ஷிண ஸம்ப்ரதாய பஜன மாலா	40/-
42.	கோவிந்தபுரம் பஜன பத்ததி	40/-
43.	ஏகநாதர் திவ்ய சரித்திரம்	50/-
44.	ஸ்ரீ த்யாகராஜரின் ராம(நாம) ரசம்	40/-
45.	ஸ்ரீ ருக்மிணி கல்யாணம்-பாசுரங்கள்	50/-
46.	தக்ஷிண ஸம்ப்ரதாய கல்யாண மாலா	35/-
47.	உன்மாதினி யசோதா	35/-
48.	கலியுக தர்ம சாஸ்திரம்	35/-
49.	அபங்க முத்தாரம்	30/-
50.	வ்ரஜ ரஸம்	30/-
51.	ப்ரேம சாம்ராஜ்யம்	30/-
52.	பக்தி	30/-
53.	ஒரு கோபியின் இதயம்	30/-
54.	வ்ரஜத்தின் ஒரு நாள்	30/-
55.	ஆறு கோஸ்வாமிகள்	30/-
56.	ஸ்ரீ க்ருஷ்ண கீதாம்ருதம்	30/-
57.	கன்னையா சிரித்தான்	30/-
58.	ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருத ரஸாயனம்	25/-
59.	பஞ்சகீதை	25/-
60.	ராதா மாதவ ப்ரேம ரசம்	25/-
61.	சிவானந்த லஹரீ - ப்ரதிபத அர்த்தம்	25/-
62.	ஸௌந்தர்ய லஹரீ - ப்ரதிபத் அர்த்தம்	25/-

Koviloor Digital Library

63.	ஐயாவாளின் நாம அனுபவங்கள்	25/-
64.	ஸ்ரீ சுந்தர காண்டம்	25/-
65.	ஸ்ரீ ராம மாதுரீ	25/-
66.	பக்த ரத்தினங்கள்	25/-
67.	பாண்டுரங்க லீலைகள் -பாசுரங்கள்	25/-
68.	கிருஷ்ண கர்ணாம்ருதம் -பாசுரங்கள்	25/-
69.	தியாகராஜர் அனுபவங்கள்	25/-
70.	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் கீர்த்தனைகள்	25/-
71.	ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்	25/-
72.	பக்தை மீரா	25/-
73.	பக்த ஸாம்ராஜ்யம்	25/-
74.	நாம ஸாம்ராஜ்யம்	25/-
75.	ஸ்ரீ லலிதா பஜனை கீர்த்தனைகள்	25/-
76.	மனாசேஸ்லோக	25/-
77.	சியாம சுந்தரனின் சுபாவம்	25/-
78.	ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமம் ப்ரதி பத அர்த்தம்	25/-
79.	பூஜா கல்பம்	25/-
80.	மௌனத்தின் குரல்	25/-
81.	ஞான அருவி	25/-
82.	அம்பாஷ்டபதி	25/-
83.	பகவன் நாம ரஸாயனம்	20/-
84.	ஸ்ரீ பாத ஸப்ததி	20/-
85.	ஸ்ரீ யாக்ஞவல்கியர் திவ்ய சரித்திரம்	20/-
86.	ஸ்ரீ துளஸி தாஸர் திவ்ய சரித்திரம்	20/-
87.	ஸௌந்தர்யலஹரி - தமிழ் பாடல்கள்	20/-

Koviloor Digital Library

88.	சிவ சஹஸ்ரநாம ப்ரதி பத அர்த்தம்	20/-
89.	தினசரிபாகவதம்	20/-
90.	நாமவைபவம்	20/-
91.	நாமச் சிறப்பு	20/-
92.	நாம சக்தி	20/-
93.	காலங்கள் அறிந்த காஞ்சி மாமுனிவர்	20/-
94.	ஆயிரம் நாமக் குறிப்புகள்	25/-
95.	போதேந்த்ர அமுதம்	20/-
96.	த்வமேவ ஶரணம் லலிதாம்பிகே	20/-
97.	சிவாம்ருதம்	20/-
98.	ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் திவ்ய சரித்திரம்	15/-
99.	குருவாயூரப்பன் அந்தாதி-பாசுரங்கள்	15/-
100.	தயாசதகம்-பாசுரங்கள்	15/-
101.	ஸம்க்ஷேப ராமாயணம் -பாசுரங்கள்	15/-
102	ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம்	15/-
103.	ஸ்ரீ ராதா மாதவ - பஜனை பத்ததி	15/-
104.	நவராத்திரி கீர்த்தனைகள்	15/-
105.	பக்தி ஸந்தேஹ த்வாந்த பாஸ்கரம்	15/-
106.	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் திவ்ய சரித்திரம்	15/-
107.	நந்தன் சரித்திரக் கீர்த்தனைகள்	15/-
108.	ஸ்ரீ ப்ரும்மேந்திராள் கீர்த்தனைகள்	15/-
109.	ஸ்ரீ பத்ராசல ராமதாஸர் திவ்ய சரித்திரம்	15/-
110.	திருமாலை	15/-
111.	ஸ்ரீ போதேந்திராள் சரித்திரம்	5/-
112.	ஸ்ரீ ஐயாவாள் சரித்திரம்	15/-

Koviloor Digital Library

113. ஸ்ரீ ஸத்குரு சரித்திரம்	15/-
114. Sri Bodendral English	15/-
115. Sri Sridhara Ayyaval English	15/-
116. Sri Sadguru Swamigal English	15/-
117. Sri Sadasiva Brahamendra English	15/-
118. Sri Bodendral Malayalam	15/-
119. Sri Sridhara Ayyaval Malayalam	15/-
120. Sri Sadguru Swamigal Malayalam	15/-
121. Sri Bodendral Hindi	15/-
122. Sri Sridhara Ayyaval Hindi	15/-
123. Sri Sadguru Swamigal Hindi	15/-
124. Sri Bodendral Telugu	15/-
125. Sri Sridhara Ayyaval Telugu	15/-
126. Sri Sadguru SwamigalTelugu	15/-
127. கோஸம்ரக்ஷணம்	15/-
128. தினசரிராமாயணம்	15/-
129. ஆசாரமும் ஆஹாரமும்	15/-
130. மன அமைதி வேண்டுமா?	15/-
131. நாமவிசேஷம்	15/-
132. சிஷாஷ்டகம்	15/-
133. ஆதார க்ஷேத்ரங்களின் சிவ-சக்தி ஆராதனை	15/-
134. கீத கோவிந்தம்	10/-
135. ஹரி பாட்	10/-
136. ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஸஹஸ்ர நாமம்	10/-
137. நாரத பக்திஸூத்ரம்	10/-

Koviloor Digital Library

138.	ஸ்ரீ ஸமர்த்த ராமதாசர் திவ்ய சரித்திரம்	10/-
139.	திருவரங்கன் திருவந்தாதி- பாசுரங்கள்	7/-
140.	பரமார்த்த ஸ்துதி- பாசுரங்கள்	7/-
141.	நாமாயணம்	10/-
142.	ஸ்ரீ கீதா ஸாரம் -பாசுரங்கள்	7/-
143.	ஸ்ரீ போதேந்திராள் கீர்த்தனைகள்	5/-
144.	ஸ்ரீ போதேந்திராள் நாம வந்தனம்	5/-
145.	கீதா ஸஹஸ்ர நாமாவளி	5/-
146.	புருஷோத்தம ஸஹஸ்ர நாமம்	5/-
147.	நாம உயர்வு	5/-
148.	ராம தாபின்யுபநிஷத் கலிசந்தரணோபநிஷத்	5/-
149.	போதேந்த்ர ஸ்வாமிகள் சரித்திரச்சுருக்கம்	3/-
150.	நாமப்ரபாவம்	5/-
151.	ஸ்ரீபோதேந்திராள் அஷ்டோத்திரம்	5/-
152.	100 / 100	5/-
153.	ஸ்ரீ ராம நாம மஹிமை	5/-
154.	அபங்கப்ரவாஹம்	5/-
155.	ஸ்ருதிகளிலிருந்து ரமநாமத்தின் பெருமை	5/-
156.	புருஷ ஸுக்தம்	5/-
157.	ஸ்ரீ ஸுக்தம்	5/-
158.	அனுமன் நாற்பது	5/-
159.	ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்	
160.	ஸ்ரீபகவன் நாம மகிமை	
161.	ஸ்ரீ வாசுதேவ ப்ரம்மம்திவ்ய சரித்திரம்	5/-

Koviloor Digital Library

162.	ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் திவ்ய சரித்திரம்	15/-
163.	நாம சாதனை	20/-
164.	சந்திசேகரஷ்டகம்	6/-
165.	நாம பாகவதம்	6/-
166.	நாம ராமாயணம்	6/-
167.	ராம நாமாவளி	6/-
168.	பாசுரப்படி ராமாயணம்	6/-
169.	ஸ்ரீ ராம நாமம்	15/-
170.	ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதம்	300/-
171.	ஸ்ரீ வ்ருந்தாவன மஹிமாம்ருதம்	80/-
172.	ஸ்ரீ கோவிந்த லீலாம்ருதம்	80/-
173.	ஸ்ரீ ஹரி பக்தி விலாஸம்	50/-
174.	ஸ்ரீ ராமநாம எழுத்து ஜப யோகம்	80/-
175.	விதக்த மாதவம்	60/-
176.	லலித மாதவம்	60/-
177.	சோகாமேளர் சரித்திரம்	
178.	ஸ்ரீதாமாஜி பண்டிதர் சரித்திரம்	
179.	நரசிம்மமேதா சரித்திரம்	
180.	கோராகும்பார்சரித்திரம்	
181.	ஸ்ரீஜயதேவர் சரித்திரம்	
182.	போசலபாவா சரித்திரம்	
183.	பானுதாஸர் சரித்திரம்	
184.	ஸ்ரீமந் நாராயணீயம்மூலம் தமிழில் - பெரிய எழுத்தில்	60/-
185.	வேதம் முழங்கும் நாமதர்மம்	20/-

Koviloor Digital Library

வேதம் முழங்கும் நாமதர்மம்

இந்த கலிகாலத்தில் மனிதன் பேரானந்தம் எனப்படும் மோக்ஷத்தை அடைவதற்கு ஆத்ம ஞானம்தான் உபாயம், அத்தகைய ஆத்ம ஞானமானது ஸகுணமான பரம்பொருளின் பக்தியால்தான் அடைய வல்லது. பக்தியை 'பாகவதம்' முதலிய க்ரந்தங்கள் ஒன்பதுவிதமாக பிரித்து கூறியிருக்கின்றன. அந்த ஒன்பது பக்திகளில் முதல் மூன்று மிகவும் உயர்ந்தது / எளிமையானது.

ஸ்ரீஆதிசங்கரர், ஸ்ரீபகவந்நாமபோதேந்திர ஸரஸ்வதி ஶங்கராசார்யஸ்வாமிகள், ஸ்ரீதர அய்யாவாள், ஸ்ரீஸத்குரு ஸ்வாமிகள் போன்ற மஹான்கள் 'பகவன் நாமம்' ஒன்றுதான் நன்மையை அளிக்கவல்லது என்று கூறியிருக்கிறார்கள். ஆண்டாளும் 'உத்தமன் பேர் பாடி' என்று கூறியிருக்கிறாள். ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிகளும் 'நீ நாம ரூபமுலகு நித்ய ஜய மங்களம்' என்று பகவன் நாமாவிற்கே மங்களம் பாடியிருக்கிறார்.

सदा वैकुण्ठनिलयाः हरिनामपरायणाः
अतः कालसमादिष्टा जरा युष्मान् न बाधते ।।

ஸதா வைகுண்ட நிலயா: ஹரி நாம பராயணா: ।
அத: கால ஸமாதிஷ்டா ஜரா யுஷ்மான் ந பாததே

பதவுரை:

ஹே ஸநகாதய: - *ஓ ஸனகாதி மஹர்ஷிகளே!*
ஸதா - *எப்பொழுதும்*
ஹரி நாம பராயணா: - *ஹரியின் நாமத்தையே உச்சரித்து வருபவர்களாயும்*
வைகுண்ட நிலயா: - *வைகுண்டத்தையே இருப்பிடமாக கொண்டவர்களாயும் இருக்கிறீர்கள்*
அத: - *அதனாலேயே*

Koviloor Digital Library

காலஸமாதிஷ்டா	-	*காலத்தினுடைய கட்டாயமான*
ஜரா	-	*மூப்பானது*
யுஷ்மான்	-	*உங்களை*
ந பாததே	-	*பாதிப்பதில்லை.*

தெளிவுரை

எப்பொழுதும் இறைவனது திரு நாமத்தையே உச்சரித்தும், ஸ்மரித்தும் வருபவர்களுக்கு தன்னைப் பற்றிய கவலையே ஏற்படாததால் அவர் மனமானது ரஜஸ், தமஸ் இவைகளில் இறங்காமல் ஸத்வ நிலையிலேயே இருப்பதால் அது உடலளவிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. இதனால் மூப்பும் தள்ளிப் போடப்படுகிறது. இது யோக நிலையில் உடலளவில் ஏற்படக்கூடிய மாறுதல் எனத் தெளிக.

இவ்விதம் பெருமை பெற்ற பகவன் நாமங்களில் 'ராம' நாமம்தான் தலைசிறந்தது. இந்த 'ராம' நாமத்தின் பெருமை எங்கெங்கு கூறப்பட்டிருக்கிறது என்பதை இனி வரும் ஸ்லோகங்களில் காணலாம்.

மனுஸ்ம்ருதி :

सप्तकोटिमहामन्त्राः चित्तविभ्रमकारकाः ।
एक एव वरो मन्त्रः श्रीरामेत्यक्षरद्वयम् ।।

ஸப்த கோடி மஹா மந்த்ரா: சித்தவிப்ரம காரகா:
ஏக ஏவ வரோ மந்த்ர: ஸ்ரீராமேத்யக்ஷர த்வயம் ॥

பதவுரை:

சித்தவிப்ரமகாரகா:	-	*எண்ணத்தில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ள*

Koviloor Digital Library

மஹாமந்த்ரா:	-	பெரிய பெரிய மந்திரங்கள் (பல்வேறு பயன்களை அளிக்கவல்லவைகள்)
ஸப்தகோடி (பவந்தி)-		ஏழு கோடி எனும் எண்ணிக்கையில் உள்ளன
பரந்து	-	ஆனால் இவைகளுள்
அக்ஷரத்வயம்	-	இரண்டெழுத்திலமைந்துள்ள
ஸ்ரீராம இதி	-	'ராம' எனும்
மந்த்ர:	-	மந்திரமானது
ஏக: ஏவ	-	ஒன்றே
வர:	-	மிகவும் உயர்ந்தது.

தெளிவுரை:

मननात् त्रायते इति என்று 'மந்த்ரம்' எனும் சொல்லுக்கு விளக்கமளிக்கப்படுகிறது. அதாவது நினைத்து நினைத்துப் பார்ப்பதாலேயே நம்மைக் காப்பாற்றுகிறது என்று இதற்கு பொருள்.

இப்படி மந்திரங்கள் கோடிக்கணக்கானவைகள் நமது வேத, புராண, இதிகாஸங்களில் விரவிக் கிடக்கின்றன. இம்மந்திரங்களை தகுந்த குரு மூலம் உபதேசம் பெற்று அவைகளை மனனம் செய்வதால் அம்மந்திரத்தின் பொருளுக்கேற்ப, ஜபிப்பவரின் விருப்பத்திற்கேற்ப பயன்கள் விளைகின்றன. இம்மந்திரங்கள் பல்வேறு பயன்களை அளிக்கவல்லவைகள். நாம் அனைவருக்கும் எல்லா ஐச்வர்யங்களையும் பெற ஆசை உள்ளது. ஆனால் இம்மந்திரங்களோ ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பலனை மாத்திரம் அளிக்க வல்லவைகளாக இருப்பதால் எதையாவது கேட்கப்போக மற்றவைகள் கிடைக்காமல் போய்விடலாம். இதனால் எதைக் கேட்பது என்பதில் நமக்கு எண்ணத்தில் குழப்பம் ஏற்படுவது ஸஹஜம். ஆதலால்தான் சித்தத்தில் குழப்பமேற்படுத்துபவைகளாக

Koviloor Digital Library

இவைகள் கருதப்படுகின்றன. 'ராம' எனும் இரண்டெழுத்து மந்திரமோ எனில் அனைத்து ஐச்வர்யத்தையும் அளிக்கவல்லதாக இருப்பதால் நமது எண்ணத்தில் உள்ள குழப்பத்தை நீக்கி தெளிவை ஏற்படுத்துகிறது. ஆகவே இம்மந்திரம் ஒன்றே மந்திரங்களுள் மிகவும் சிரேஷ்டமானது.

ஹாரிதஸ்ம்ருதி:

तस्मात् सर्वात्मना रामनामरूपं परं श्रियम्।
मन्त्रं जपेत् सदाश्रीमान् संविहायान्यसाधनम्।।

தஸ்மாத் ஸர்வாத்மநா ராம நாம ரூபம் பரம் ச்ரியம் ।
மந்த்ரம் ஜபேத் ஸதா ஸ்ரீமான் ஸம்விஹாயான்ய ஸாதனம் ॥

பதவுரை:

ஸ்ரீமான்	-	*லக்ஷ்மி கடாக்ஷமுள்ளவனானவன்*
தஸ்மாத்	-	*ஆதலால் (எல்லாவித இகலோக, பரலோக ஐச்வர்யங்களையும் அளிக்கவல்லதாக விளங்குவதால்)*
அன்யஸாதனம்	-	*மற்ற சாதனங்களான பல்வேறு மந்திரங்களை*
ஸம்விஹாய	-	*அறவே விட்டுவிட்டு*
ஸர்வாத்மநா	-	*எல்லா வகையிலும், எந்நிலையிலும் முழுவதுமாக*
ராம நாம ரூபம்	-	*'ராம' எனும் நாம வடிவிலான*
பரம் ச்ரியம்	-	*இதற்குமேல் அடைவதற்கு ஒன்றும் இல்லை எனப்படும் உயர்ந்த ஐச்வர்யத்தை (மோக்ஷத்தை)த் தரவல்ல*
மந்த்ரம்	-	*மந்திரத்தை*

Koviloor Digital Library

ஸதா - *எப்போதும் (ஸர்வ காலமும்)*
ஜபேத் - *ஜபிப்பானாக.*

தெளிவுரை:

உலகில் பொருளையடைய பல்வேறு சாதனங்கள் கூறப்படுகின்றன. மந்திரம் ஜபித்தல், தாயத்து அணிதல், தவமிருத்தல், பலியிடுதல் இன்ன பிற சாதனங்களால் ஒருவன் நினைத்த பொருளை அடைய முடியும். ஆனாலும் இவ்விதமாக பெறப்படும் இன்பங்கள் நிலைத்து நிற்கமாட்டா. இவைகள் நம்மை மீண்டும் ஸம்ஸாரத்தில்தான் தள்ளிவிடும். ஆனால் 'ராம' எனும் இரண்டெழுத்து மந்திரமோ எனில் இகவாழ்விலும் பரவாழ்விலும் எல்லாவித நன்மைகளையும் அளித்து முக்தியையும் அடைவிக்கவல்லதாக இருப்பதால், ஐச்வர்யத்தை விரும்புகிறவன் மற்ற எந்த சாதனங்களையும் கைக்கொள்ளாமல் "ராம" நாமத்தையே ஜபிப்பானாகில் அவன் உட்பட எல்லா வித இன்பங்களேயும் பெறுவது திண்ணம்.

குறிப்பு:

புண்யம் எனும் ஐச்வர்யம் இருப்பவன்தான் மேலும் மேலும் ஐச்வர்யத்தை விரும்புவான், பாவியானவன் மேலும் மேலும் பாபத்தைத்தான் விரும்புவான். அதனாலேயேதான் 'ஸ்ரீமான்' எனும் பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

மேலும்

ராம நாம ஜபமோ, மற்ற உலகாயத இன்பங்களை மட்டும் அளிக்காமல் தன்னையே அளிக்கிறது. அதாவது ராம நாமத்தை ஜபிப்பவன் ராமனையே பெருகிறான். அதாவது முக்தியை அடைகிறான் என்று பொருள்.

Koviloor Digital Library

தக்ஷ ஸ்ம்ருதி:

धन्या माता पिता धन्यः धन्यात् धन्य तमं कुलम् ।
यत्र श्रीरामनाम्नस्तु जापको जायते शुचिः ॥

தன்யா மாதா பிதா தன்ய: தன்யாத் தன்யதமம் குலம் ।
யத்ர ஸ்ரீ ராம நாம்னஸ்து ஜாபகோ ஜாயதே சுசி: ॥

பதவுரை:

யத்ர (குலே)து	-	எந்த குலத்திலோ எனில்
ஸ்ரீ ராமநாம்ந:	-	ஸ்ரீ ராமனுடைய நாமத்தினுடைய
ஜாபக:	-	ஜபிப்பவனான (அதனாலேயே)
சுசி:	-	பரிசுத்தமானவன்
ஜாயதே	-	தோன்றுகின்றானோ
தஸ்ய	-	அவனுடைய
மாதா	-	தாயாரானவள்
தன்யா	-	மிகவும் புண்யம் செய்த பாக்யசாலியானவள்
தஸ்ய	-	அவனுடைய
பிதா	-	தந்தையானவர்
தன்ய:	-	மிகவும் பரிசுத்தமானவர் பாக்யசாலியானவர்
தன்யாத்	-	இவர்களுடைய் பரிசுத்தத் தன்மையைவிட
குலம்	-	இவர்களுடைய குலமானது
தன்யதமம்	-	மிகவும் புண்யத்தினால் பரிசுத்தமடைந்ததாகிறது.

தெளிவுரை:

புண்யம் செய்தவர்களுக்கே பக்திமானான குழந்தை பிறக்கும். பக்திமானான குழந்தை பிறந்ததாலேயே அந்த

Koviloor Digital Library

குலம் புண்யத் தன்மை அடைந்து பாக்யசாலி குலமாகும் என ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பது இயல்பு, நியதி. இந்த நியதியைத்தான் மேற்கண்ட சுலோகம் நிரூபிக்கிறது. சிவகுரு, ஆர்யாம்பாள் என்ற இரு புண்யசாலி தம்பதிகளுக்குத்தான் ஆதிசங்கரர் எனும் மஹான் பிறந்தார். இவர் பிறந்ததாலேயே அக்குலம் பாக்யசாலியாயிற்று என்று தெளிக.

ஶனைஶ்சர ஸ்ம்ருதி:

सर्वोपद्रवनाशार्थं रामनाम जपेद्बुधः
सत्यं सत्यं नसन्देहः मन्तव्यं महतां जनैः ।।

ஸர்வோபத்ரவ நாஶார்த்தம் ராம நாம ஜபேத் புத: ।
ஸத்யம் ஸத்யம் ந ஸந்தேஹ: மந்தவ்யம் மஹதாம் ஜனை: ।।

பதவுரை:

புத:	-	புத்திசாலியானவன்
ஸர்வோபத்ரவ நாசார்த்தம்	-	(தன்னுடைய) அனைத்துத் தீமைகளும் அகல்வதற்காகவும் அகற்றுவதற்காகவும்
ராம நாம	-	ராம நாமத்தையே
ஜபேத்	-	ஜபிப்பானாக
மஹதாம் ஜனை:	-	அறிவாளியான பெரியவர்களால்
ஸத்யம்	-	இந்த உண்மையானது
ஸத்யம்	-	உண்மையென்பதாகவே
மந்தவ்யம்	-	நம்பப்பட வேண்டும் (கிஞ்சித்தும் பொய் இல்லை எனவாறு நம்பப்பட வேண்டும்)
ஸந்தேஹ:	-	சந்தேஹமானது
ந (கார்ய:)	-	கொள்ளத்தகாதது.

Koviloor Digital Library

தெளிவுரை:

அறிவாளிகளுக்குக் கூட தான் செய்த முற்பிறவிப் பயனால் (பாவத்தால்) நிஜமான வஸ்துவில் கூட (ஈச்வரன், குரு இவர்களிடத்தில்) சந்தேஹம் ஏற்படக் கூடும். இப்படி ஸந்தேஹம் ஏற்படுவதுதான் இவர்கள் செய்த பாவத்தின் அறிகுறி. ஆனால் புத்திசாலியானவன் 'ராம' நாமத்திற்கு உள்ள பலத்தை நன்கு அறிந்து அதை ஜபித்து தன்னை காப்பாற்றிக் கொள்வான். அறிவாளிகள் எனப்படுபவரது அறிவானது இந்த உண்மையை (ராம நாமம் காக்க வல்லது என்பதை) உண்மையாகவே நம்ப வேண்டும். ஸந்தேஹத்திற்கு இடமளித்தல் கூடாது. சிறிது ஸந்தேஹம் எழுந்தாலும் மந்திரம் பயனிழந்து பட்டுபோகும் எனத் தெளிக.

ஸ்ரீராமன் இலங்கை செல்வதற்காக அணை கட்டும் சமயம் ஆஞ்சநேயருக்கு ஏழரை நாட்டு சனி ஆரம்பம். சனி சூரியன் பிள்ளையாதலால் தன்னிடம் ஏழு ஆண்டுகள் தங்க வந்த சனிக்கு சூரியனின் சிஷ்யரான ஹனுமார் குரு புத்திரன் என்ற மரியாதையால் தன் தலையில் இடமளித்து ஏழு ஆண்டுகள் தங்குமாறு கூறினார். சனியும் ஆஞ்சனேயர் தலையில் தங்கினார். அப்பொழுது அணை கட்டுவதற்காக மலைகளை பிடுங்கி தன் தலையில் கோபுரம்போல ஹனுமார் அடுக்கினார். இதனால் தலையில் உள்ள சனிபகவான் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டது. அது சமயம் 'ராம' நாமாவை உரக்கக் கூறியதால் ஸ்ரீராமனின் காதில் விழுந்தது சனி பகவான் பிழைத்தார். இவ்விதம் 'ராம' நாமாவின் பெருமையை சனி பகவான் தான் ஓடும்பொழுது பின்வருமாறு கூறிச் சென்றார்.

यो वदेत् राम ते नाम मारुतेः आपि वा स्वयम् ।
क्षणं तत्र न तिष्ठेयं सत्यं प्रतिशृणोमि ते ॥

யோ வதேத் ராம தே நாம மாருதே: அபி வாஸ்வயம்
க்ஷணம் தத்ர ந திஷ்டேயம் ஸத்யம் ப்ருதிச்ருணோமி தே ॥

Koviloor Digital Library

ஓ ராம! உன் நாமாவையோ அல்லது இந்த ஹனுமானின் நாமத்தையோ எவன் கூறுகிறானோ அவன் இருக்கும் இடத்தில் ஒரு கணநேரம்கூட நான் நிற்க மாட்டேன். உண்மையாக பிரதிக்ஞை செய்கிறேன்.

ச்யவன ஸ்ம்ருதி:

श्रुतिस्मृतिपुराणेषु रामनाम समीरितम्।
तन्नाम कीर्तनं भूयः तापत्रयविनाशनम्।।

ச்ருதி ஸ்ம்ருதி புராணேஷு ராம நாம ஸமீரிதம் ।
தந் நாம கீர்த்தனம் பூய: தாபத்ரய விநாசனம் ।।

பதவுரை:

ச்ருதி ஸ்ம்ருதி புராணேஷு	-	வேதம், ஸ்ம்ருதிகள், புராணங்கள் என இவையனைத்திலும்
ராம நாம	-	ராமனது பெயரானது
ஸமீரிதம்	-	(மிகவும் புண்யத்தைத் தரவல்லதாக) கூறப்பட்டுள்ளது
அத:	-	ஆகையால்
பூய: பூய:	-	மறுபடியும் மறுபடியும்
தந் நாம கீர்த்தனம்	-	அந்த 'ராம' நாமாவை ஜபிப்பதானது
தாபத்ரய விநாசனம்	-	ஆத்யாத்மிகம் (உடலில் தோன்றும் கஷ்டங்கள்) ஆதிதைவிகம் (இடி முதலான ஆபத்துக்கள்) ஆதிபௌதிகம் (துஷ்ட ஜந்துக்களால் ஏற்படும் கஷ்டங்கள்) எனும் மூன்றுவித தாபங்களையும் போக்கடிக்கக் கூடியதாக
பவதி	-	ஆகிறது.

Koviloor Digital Library

தெளிவுரை:

மேற்கூறிய தாபங்கள் பிறந்த அனைவராலும் இயற்கையாகவே அனுபவிக்கப்படுகின்றன. இதிலிருந்து தப்பிக்க 'ராம' நாமாவை விட்டால் வேறு வழியில்லை எனப் பொருள் காண்க. இந்த 'ராம' நாமாவிற்கு மட்டுமே இந்த சக்தி இருப்பதால்தான் வேத ஸ்ம்ருதி புராணங்களனைத்திலும் இந்த பகவன் நாமாவே சிறப்பிக்கப் பட்டுள்ளது என்பதையும் அறிக.

ஹனூமத் ஸம்ஹிதா

राम त्वत्तोऽधिकं नाम इति मे निश्चितामतिः।
त्वया तु तारिताऽयोध्या नाम्ना तु भुवनत्रयम्॥

ராம த்வத்தோऽதிகம் நாம இதிமே நிஶ்சிதாமதி: ।
த்வயாது தாரிதாऽயோத்யா நாம்நாது புவனத்ரயம் ॥

பதவுரை:

ராம	-	ஹே ராமனே
த்வத்த:	-	உன்னைக் காட்டிலும்
அதிகம்	-	அதிக பலமுள்ளதாக, பெரியதாக, சக்தியுள்ளதாக
த்வ்த்நாம	-	உன் நாமாவே இருக்கிறது
இதி	-	என்று
மே	-	என்னுடைய
நிஶ்சிதா	-	தீர்மானமான
மதி:	-	முடிவாகிறது
யத:	-	ஏனென்றால்
த்வயாது	-	உன்னாலோ எனில்
அயோத்யா	-	அயோத்தி மாநகர் மட்டுமே

Koviloor Digital Library

தாரிதா	-	*கரையேற்றப்பட்டது.*
நாம்நாது	-	*உனது நாமத்தாலோ எனில்*
புவனத்ரயம்	-	*மூன்று உலகும்*
தாரிதம்	-	*கரையேற்றப்பட்டது.*

தெளிவுரை:

ராமாவதார முடிவில் ஸரயூ நதியில் ராமன் தன் ஊர்வாசிகளுடன்கூட மட்டுமே வைகுண்டம் ஏகினான். அயோத்யாவாசிகளான அவர்கள் மட்டுமே வைகுண்டம் சென்றனர். ராம நாமாவை உச்சரிப்பவர்களோ யாராக இருந்தாலும், எவ்வுலகில் இருந்தாலும் அவர்களையும் அந்நாமமே கரையேற்றுகிறது என்பதால் ராமனைவிட அவன் நாமமே பலமிக்கதாக கொள்ளப்படுகிறது. இங்கு 'கரையேற்றப்பட்டது' என இறந்த காலத்தில் குறிப்பிட்டிருந்தாலும் இன்றும் என்றும் இந்நாமாவே நம்மை கரையேற்றவல்லது எனத் தெளிவது அவஸியம்.

விஸ்வாமித்ர ஸ்ம்ருதி:

राम रामेति यो नित्यं मधुरं जपते क्षणम् ।
स सर्वसिद्धिमाप्नोति सत्यं नैवात्र संशयः ।।

ராம ராமேதியோ நித்யம் மதுரம் ஜபதே க்ஷணம் ।
ஸ ஸர்வ ஸித்திம் ஆப்னோதி ஸத்யம் நைவாத்ர ஸம்சய: ॥

பதவுரை:

ய:	-	*எவனொருவன்*
ராம ராம இதி	-	*ராம ராம என்று*
நித்யம்	-	*அனுதினமும்*
க்ஷணம்	-	*க்ஷண காலமாவது*
மதுரம்	-	*அதன் மதுரத் தன்மையை உணர்ந்து*

Koviloor Digital Library

ஜபதே	-	*ஜபிப்பானோ*
ஸ:	-	*அவன்*
ஸர்வஸித்திம்	-	*எல்லாவிதமான அபீஷ்டங்களையும்*
ஆப்னோதி	-	*அடைகிறான்.*
அத்ர	-	*இவ்விஷயத்தில்*
ஸம்சய:	-	*ஸந்தேஹமானது*
நைவாஸ்தி	-	*இல்லவே இல்லை*
ஸத்யம்	-	*இது முற்றிலும் உண்மை.*

தெளிவுரை:

ராம நாமத்திற்கே உரித்தான இனிப்புச் சுவையை உணர்ந்து ஜபிப்பவனுக்கு அந்நாமத்தில் லயிப்பவனுக்கு இஹபர ஸௌக்யங்கள் கிட்டுமென்பதில் லவலேசம் கூட ஸந்தேஹம் கொள்ளத் தேவையில்லை. அதன் இனிமையை உணராதவனுக்கு எந்த ஸௌக்யமும் ஸௌக்யமாய் இராது என்பது தெளியத்தக்கது.

எவன் 'ராம' 'ராம' என்று மதுரமாக ஒரு கண நேரமாவது ஜபிக்கிறானோ அவன் எல்லா ஸித்திகளையும் அடைகிறான். உண்மை. இதில் சந்தேகமே இல்லை. யாகத்தை பாதுகாப்பதற்காக தசரதனிடம் வேண்டிப் பெற்ற ராமனை அழைத்துச் சென்ற விஸ்வாமித்ரர் 15 மைல் தூரம் 'ராம' என்று அழைக்காமலேயே சென்றார். தன் விரோதியான வஸிஷ்டரால் வைக்கப்பட்ட பெயர் என்று எண்ணி 'ராம' நாமாவிற்கு சமமான வேறு நாமாக்களை 15 மைல் தூரம் ஆலோசித்தும் 'ராம' நாமாவிற்கு சமமான வேறு இனிமையான நாமா ஒன்றும் இல்லாததால் 'ராமா' என்று அழைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தீர்மானித்து 'ராமா' என்று இனிமையான நாமாவைக் கூறி அழைத்தார்.

अत्यन्त योजनंगत्वा सरय्वाः दक्षिणे तटे।
रामेति मधुरां वाणीं विश्वामित्रोऽप्यभाषात ॥

Koviloor Digital Library

அத்யந்த போஜனம் கத்வா ஸரய்வா: தக்ஷிணே தடே ।

ராமேதி மதுராம் வர்ணீம் விச்வாமித்ரோப்ய பாஷத ॥

என்று வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. அங்குள்ள மதுராம் என்ற சொல்லைத்தான் மதுரம் என்று விஸ்வாமித்ர ஸ்ம்ருதியில் கூறப்பட்டிருக்கிறது.

மார்க்கண்டேய ஸம்ஹிதா

अन्तःकरणसंशुद्धिः नान्यसाधनतो भवेत्।

कलौ श्री रामनामैव सर्वेषां सम्मतं परम्॥

அந்த:கரண ஸம்சுத்தி: நான்ய ஸாதனதோ பவேத் ।

கலௌ ஸ்ரீராம நாமைவ ஸர்வேஷாம் ஸம்மதம் பரம் ॥

பதவுரை:

மானவானாம் அஸ்மாகம்-(*மனிதர்களாகிய நமக்கு*)

அந்த:கரண ஸம்சுத்தி:	-	*மனத்தூய்மையானது (எண்ணத்தூய்மையானது) இக்கோரமான கலியுகத்திலே*
ஸ்ரீ ராம நாம ஏவ	-	*ஸ்ரீ 'ராம' எனும் நாமத்தால் மட்டுமே*
பவேத்	-	*ஏற்படும்*
அன்ய ஸாதனத:	-	*மற்ற எந்த ஒரு சாதனத்தாலும் (உபாயத்தாலும்)*
ந பவேத்	-	*ஏற்படாது*
அத:	-	*ஆகையால்*
ஸ்ரீ ராம நாம ஏவ	-	*ஸ்ரீ ராம நாமா மட்டுமே.*
ஸர்வேஷாம்	-	*அனைவருக்கும்*
பரம்	-	*இறுதியான*
ஸம்மதம்	-	*(மனத்தூய்மைக்கான)உபாயமாகும்*

Koviloor Digital Library

தெளிவுரை:

'புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை வாய்மையிற் காணப்படும்' என்பது குறள். ராம நாமா ஒன்றுதான் சத்தியம். அதுவே வாய்மை, அதுவே ஒழுக்கத்தின் குறியீடு. ஆகவே மனமுருகி இழைந்து குழைந்து ராம நாமாவை ஜபிப்பது மட்டுமே மனத்தூய்மைக்கு ஒரே உபாயம். வேறு சாதனம் இதற்காக கிடையாது. இருந்தாலும் அது நிரந்தரமானதோ, அனைவருக்கும் ஒப்புதலானதோ அல்ல.

மஹா சம்பு ஸம்ஹிதா

अहं भवन्नाम गृणन् कृतार्थो वसामि काश्यामनिशं भवानाम्।
मुमूर्षमाणस्य विमुक्तयेऽहं दिशामि मन्त्रं तव राम नाम।।

அஹம் பவந்நாம க்ருணந் க்ருதார்தோ
வஸாமி காஶ்யாம் அனிசம் பவானாம் ।
முமூர்ஷ மாணஸ்ய விமுக்தயே஽ஹம்
திசாமி மந்த்ரம் தவ ராம நாம ॥

பதவுரை:

ஹே ராம!	-	*ஓ ராமனே!*
அஹம்	-	*நான் (பரமேச்வரன்)*
பவந்நாம	-	*உன்னுடைய நாமாவை*
க்ருணன்	-	*உச்சரித்துக் கொண்டு (ஜபித்துக் கொண்டு)*
க்ருதார்த்த:	-	*வாழ்வின் பயனை அடைந்தவனாக*
காச்யாம்	-	*காசியில்*
வசாமி	-	*வசித்து வருகிறேன்.*

Koviloor Digital Library

முமூர்ஷமாணஸ்ய	-	இறக்கும் தருவாயில் உள்ள ஜீவனுக்கு
பவானாம்	-	ஸம்ஸாரத்துடைய தாபங்களின்
விமுக்தயே	-	விடுபடுதலுக்காக (தாபத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு)
அனிசம்	-	எப்போதுமே (உபாயமாக)
தவ	-	உன்னுடைய
ராம நாம மந்த்ரம்	-	'ராம' என்னும் நாமமாகிய மந்திரத்தை
(உப) திசாமி	-	உபதேசிக்கிறேன்.

தெளிவுரை:

श्री राम राम रामेति रमे रामे मनो रमे ।
सहस्रनामतत्तुल्यं राम नाम वरानने ।।

ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே ।
ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராம நாம வராநனே ।।

என்று விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களுக்கு ஈடாகமஹேஸ்வரனால் 'ராம' நாமாவானது அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் அவரே காசியில் அமர்ந்து काश्यां मरणात् मुक्तिः "காசியாம் மரணாந் முக்தி" என்ற கூற்றுக்கிணங்க அங்கு இறக்க விரும்புகிறவர்களுக்கு மோக்ஷம் பெறுவதற்காகத்தானே 'ராம' நாமாவை அவர்கள் காதில் உபதேசித்து அவர்களை கரை சேர்கிறார் என்பது காசி மாஹாத்ம்யம். இன்றும்கூட காசியில் இறந்தவர்களுக்கு உடலை கங்கைக்கரையிலுள்ள மயானத்தில் தஹனம் செய்ய எடுத்து வரும்போது राम नाम सत्य है "ராம் நாம் ஸத்யஹை" என்று கூறிக்கொண்டே வருவதை நாம் பார்க்கலாம்.

Koviloor Digital Library

ப்ரம்ம ஸம்ஹிதா

श्रीरामेति वदन्जीवः याति ब्रह्म सनातनम्।
सर्वाचारविहीनोऽपि तापक्लेशादि संयुतः।।

ஸ்ரீ ராமேதி வதன் ஜீவ: யாதி ப்ரம்ம ஸநாதனம் ।
ஸர்வா சார விஹீனோऽபி தாபக்லேசாதி ஸம்யுத:

பதவுரை:

தாபக்லேசாதி ஸம்யுத:-	*மூன்றுவிதமான தாபங்களையும் ஐந்துவிதமான க்லேசங்களையும் அனுபவிக்கின்றவனும்*
ஸர்வாசார விஹீனோऽபி-	*(அவைகளை நீக்கப் பெறுவதற்காக கடைபிடிக்க வேண்டிய) ஆசார அனுஷ்டானங்களைக் கடைபிடிக்காதவனாக இருக்கக் கூடியவனுமான*
ஜீவ: -	*ஜீவனான ஸம்ஸாரியானவன்*
ஸ்ரீ ராம இதி -	*ஸ்ரீ 'ராம' என்று*
வதன் -	*சொல்லிக்கொண்டே*
ஸநாதனம் -	*அழிவில்லாத எல்லாமுமான*
ப்ரம்ம -	*'பரம்ம்ம்' எனப்படும் பரம்பொருளை*
யாதி -	*அடைகிறான்.*

தெளிவுரை:

பிறக்கும் அனைத்து ஜீவர்களும் ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம் மற்றும் ஆதிபௌதிகம் எனும் மூன்றுவிதமான தாபங்களையும், அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் எனப்படும் ஐந்துவித

Koviloor Digital Library

க்லேசங்களையும் அனுபவித்தே தீரவேண்டும் என்பது நியதி. இவைகளிலிருந்து விடுபடுவதற்கு யோக சாஸ்த்ரத்திலும், மற்றைய சாத்திரங்களிலும் பல்வேறு உபாயங்கள் ஆசார அனுஷ்டானங்கள் கூறப்படுகின்றன. ஆனால் மனிதன் இவ்வளவு துன்பப்படும் போதும் அதைத் தவிர்க்கத் தேவையான அனுஷ்டானத்தை செய்யாமலிருக்கும் போதும் ராம நாமாவை மட்டுமே ஜபிப்பானாகிலும் அவன் விடுதலை பெற்று விடுகிறான் என்று தெளிக.

அகஸ்த்ய ஸம்ஹிதா

नामसङ्कीर्तनञ्चैव गुणानामापि कीर्तनम् ।
भक्त्या श्रीरामचन्द्रस्य वचसा शुद्धिरिष्यते ।।

நாம ஸங்கீர்தனஞ்சைவ குணாநாமபி கீர்த்தனம் ।
பக்த்யா ஸ்ரீ ராம சந்த்ரஸ்ய வசஸா சுத்திரிஷ்யதே ॥

பதவுரை:

பக்த்யா	-	*பக்தியுடன்*
ஸ்ரீ ராம சந்த்ரஸ்ய	-	*ஸ்ரீ ராம சந்திரனுடைய*
நாம ஸங்கீர்த்தனம் சைவ	-	*நாம ஸங்கீர்த்தனத்தை மட்டுமாகவோ*
குணாநாம்	-	*அவருடைய குணங்களுடைய*
கீர்தனம் அபி(வா)	-	*கீர்த்தனத்தையும் சேர்த்தோ செய்வதென்பது*
வசஸா	-	*வாக்கின் மூலமாக (பெறப்படும்)*
சுத்தி:	-	*உள்ளத் தூய்மையாக*
இஷ்யதே	-	*கருதப்படுகிறது.*

தெளிவுரை:

ராம நாமத்தை இடைவிடாது ஜபம் செய்வது என்ற ஒன்றே நம்மை பண்படுத்தி சீர்திருத்தி நமக்குத்

Koviloor Digital Library

தேவையான அனைத்தையும் கொடுக்கவல்லது. இத்துடன் அவனுடைய புகழையும் குணங்களையும் சேர்த்து பாடுவதென்பது ஆழ்மனத்தின் அடியிலே ஒருவித அலாதியான சந்தோஷத்தையும் நிம்மதியையும் அளிக்கிறது. மனக் கொந்தளிப்பு அடங்கி அமைதியும், சந்தோஷமும் நிரந்தரமாகப் பெறும்போது இறை உணர்வு நம்மில் நீக்கமற நிரம்பியிருந்து நம்மை புனிதர்களாக ஆக்கிவிடும். ஆகவேதான் இறைவனது நாம ஸங்கீர்தனமோ, அவன் புகழ் பாடுவதோ வாக்கினால் பெறப்படும் உள்ளத் தூய்மையாகக் கருதப்படுகிறது. இங்கு வாக்கினால் பெறப்படும் உள்ளத் தூய்மை என்று பொருள் கூறினாலும் அதற்கு முன்னால் கண்ட கண்ட விஷயங்களைப் பேசி, பாடி அழுக்கடைந்திருக்கும் நாம் வாக்கே முதலில் தூய்மையடைந்து பின்பு அத்தூய்மையின் வழியாக உள்ளத் தூய்மைக்கும் வழிகோலுகிறது என்பது இங்கு தெளியத்தக்கது.

ஸனத்குமார ஸம்ஹிதா

श्रीरामरामेति जनाः ये जपन्ति च सर्वदा।
तेषां भुक्तिश्च मुक्तिश्च भविष्यति न संशयः।।

ஸ்ரீ ராம ராமேதி ஜனா: யே ஜபந்தி ச ஸர்வதா ।
தேஷாம் புக்திர்ச முக்திர்ச பவிஷ்யதி ந ஸம்சய: ॥

பதவுரை:

யே - *எந்தனூ*
ஜநா: - *ஜனங்களானவர்கள்*
ஸ்ரீ ராம ராமேதி - *ஸ்ரீ ராம ராம என்று*
ஸர்வதா - *எப்பொழுதும்*
ஜபந்தி - *ஜபிப்பார்களோ*

Koviloor Digital Library

தேஷாம்	-	அவர்களுக்கு
பக்தி:	-	இஹலோகத்தில் கிடைக்க வேண்டிய அனைத்து நலன்களும் கிட்டி
முக்தி: ச	-	(அதன் மூலம் பரலோக ஸௌக்யத்தையும் பெற்று) பிறவியில்லாத மோக்ஷப் பேறானதும்கூட
பவிஷ்யதி	-	கிடைக்கிறது
அத்ர	-	இவ்விஷயத்தில்
ந ஸம்சய:	-	ஸந்தேஹமில்லை

தெளிவுரை:

சாதாரணமாக (புக்தி என்றால் அனுபவிப்பது என்று பொருள். எதை? என்றால் உலகிலுள்ள அத்தனை சௌக்யங்களையும் தான்) புக்தியும் முக்தியும் ஒன்றோடு ஒன்று இணைய முடியாது. ஏனெனில் புக்தியானது மறுபடியும் மறுபடியும் ஸம்ஸாரத்தில்தான் நம்மைத் தள்ளிவிடத் தகுதியானது. இது முக்திக்கு நேர் விரோதி. ஆனால் ராம நாம ஜபத்தினால் பெறப்படும் புக்தியானது வைராக்யத்தில் கொண்டுபோய் விட்டு அதன் வழியாக முக்தியையும் தருவிக்கவல்லது என்று தெளிக.

ருத்ர யாமள தந்த்ரம்

तस्मात् विवेकिभिः नित्यं जप्तव्यम् उभयाक्षरम् ।
सिद्धान्तं सर्ववेदानां रामनाम परात्परम् ।।

தஸ்மாத் விவேகிபி: நித்யம் ஜப்தவ்யம் உபயாக்ஷரம் ।
ஸித்தாந்தம் ஸர்வவேதானாம் ராம நாம பராத்பரம் ।।

பதவுரை:

தஸ்மாத்	-	ஸம்ஸாரத்திலிருந்து விடுபட ராம நாமாவை விட்டால் வேறு கதியில்லை என்பதனால்

Koviloor Digital Library

விவேகிபி:	-	*நல்லது, கெட்டது, சரி, தவறு இவைகளை நன்றாக அறிந்த விவேகியானவர்களால்*
நித்யம்	-	*எப்போதும்*
ஸர்வவேதானாம்	-	*எல்லா வேதங்களுடையதுமான*
ஸித்தாந்தம்	-	*முடிந்த முடிவானதானதும்*
பராத்பரம்	-	*உயர்ந்தவைகளனைத்தைக் காட்டிலும் உயர்ந்ததுமான*
ராம நாம	-	*ராம நாமமென்னும்*
உபயாக்ஷரம்	-	*இரண்டெழுத்து மந்திரமானது*
ஜப்தவ்யம்	-	*ஜபிக்கப்பட வேண்டும்.*

தெளிவுரை:

உலகில் மனிதன் ஆசாபாசங்களுக்கு உட்பட்டு பல்வேறு கர்மங்களைச் செய்கிறான். இக்கர்மங்களுக்கு நிச்சயமாக ஒரு பயனுண்டு. அப்பயன் இவனை சிலசமயம் உயர்த்தும், பல சமயங்களில் தாழ்த்தும். எது தேவை, எது தேவையில்லை, எது சாச்வதமானது, எது குறைந்த ஆயுளை உடையது என்றெல்லாம் பக்குவம் அடையாதவர்களால் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் பகுத்தறிவு கொண்டவர்கள் எது நிரந்தரமானது எது எப்போதும் நிம்மதியை அளிக்கக் கூடியது. எது மோக்ஷத்திற்கு வழிகாட்டுகிறது என்றெல்லாம் அறிந்தவர்கள் எல்லா வேதங்களையும் அலசி ஆராய்ந்து முடிந்த முடிவான தத்துவங்களுக்கெல்லாம் பெரும் தத்துவமான ராம நாமாவான இரண்டெழுத்து மந்திரத்தை ஜபித்து உய்ய வேண்டும் என்று இதன் மூலம் தெளிக.

Koviloor Digital Library

ப்ரும்ம யாமள தந்த்ரம்

सर्वैश्वर्यप्रदं सर्वसिद्धिदं परमार्थदम् ।
महामङ्गलिकं नित्यं राम नाम परात्परम् ।।

ஸர்வைச்வர்ய ப்ரதம் ஸர்வஸித்திதம் பரமார்த்ததம் ।
மஹாமாங்கலிகம் நித்யம் ராம நாம பராத்பரம் ।।

பதவுரை:

ஸர்வைஸ்வர்ய ப்ரதம் - அனைத்துவித ஐச்வர்யங்களையும் (அணிமா, மகிமா எனப்படும் எட்டுவித ஐச்வர்யங்களை) அளிக்க வல்லதும்

ஸர்வ ஸித்திதம் - அதன்மூலம் அனைத்து பல சித்திகளையும் அளிக்கவல்லதும்

பர்மார்த்தம் - இவைகளுக்கெல்லாம் மேலான பரம்பொருளை அறிந்து கொள்ளுதல் எனப்படும் உயர்ந்த ஞானத்தை அளிக்கவல்லதும்

மஹாமாங்கலிகம் - மிகவும் மங்களகரமானதுமான

ராம நாம - ராம நாமமென்னும் புனிதமான நாமமே

பர்ாத்பரம் - உயர்ந்தவைகள் அனைத்தைக் காட்டிலும் உயர்ந்ததாக

அஸ்தி - இருக்கிறது.

தெளிவுரை:

ஈச்வரன் என்னும் சொல்லுக்கு நிர்வாகி, ஆள்பவன் என்பது பொருள். அவ்விதமான ஈச்வரனுடைய தன்மையானது ஐச்வர்யம் என்று அழைக்கப்படும். அதாவது

Koviloor Digital Library

அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி, ப்ராகாம்யம், ஈஶித்வம், விசித்வம் என்று எட்டுவிதமான ஐச்வர்யங்கள் உலகில் உள்ளன. யோகியர் தவ வலிமையால் இவ்வெட்டையும் பெற்றாலும் அடக்கி ஆள்பவர்களாக உள்ளனர். ஏனெனில் இவ்வெட்டாலும் கூட மனிதன் முக்தி பெறுவதில்லை. வாழ்க்கையை அடைந்ததற்கு பலன் ஐச்வர்யங்களை அடைவது மட்டுமல்ல. அதற்கு மேலே பிறவி இல்லாப் பெறுவாழ்வைப் பெறுவதே பயனாக வேதாந்த நூல்களில் கூறப்படுவதால் அவ்வித பயனான மிகவும் மங்களகரமான பரமார்த்தமான மோக்ஷ நிலையை அடைவிப்பது 'ராம' நாமமே என்பது இச்செய்யுளின் பொருள்.

தந்த்ர ஸாரம்

इदमेव परंसारं सर्वेषां मन्त्रसन्ततेः ।
वेदानां हृदयं सौम्ये "राम" नाम सुधोपमम् ॥

இதமேவ பரம் ஸாரம் ஸர்வேஷாம் மந்த்ர ஸந்ததே: ।
வேதானாம் ஹ்ருதயம் ஸௌம்யே ராம நாம ஸுதோபமம் ॥

பதவுரை:

ஹே ஸௌம்யே!	-	ஓ இனியவளே! அன்பானவளே!
ஸர்வேஷாம்	-	அனைத்து
வேதானாம்	-	வேதங்களுடைய
ஹ்ருதயம்	-	இதயம் போன்று மிக முக்கியமானதும்
மந்த்ர ஸந்ததே:	-	(பல்வேறு பயன்களை அடைய உதவும்) மந்திரத் தொடர்களுடைய
பரம்	-	மிகவும் புனிதமானதும் அதி முக்கியமானதும், உயர்ந்ததுமான

Koviloor Digital Library

ஸாரம்	-	ஸாரமானதும்
ஸுதோபமம்	-	அம்ருதத்திற்கு ஒப்பானதுமாக
இதம் ராம நாம	-	இந்த ராம நாமமே
பவதி	-	இருக்கிறது.

தெளிவுரை:

பல்வேறு ப்ரயோஜனங்களையும் பயன்களையும் தரவல்ல மந்திரங்கள், வேதங்களில் விரவிக் கிடக்கின்றன. இவைகளை எல்லாம் உயர்ந்த பழம் என்று கொண்டால் அப்பழத்தின் ரஸமானது, சாரானது அம்ருதத்திற்குச் சமமான இந்த ராம நாம மந்திரமே. இம் மந்திரமே வேதங்களுடைய இதயஸ்தானத்தில் வைக்கப்பட்டு போற்றப்படுகிறது. கண், காது, மூக்கு, வாய், கை, கால் போன்ற முக்கியமான உறுப்புகள் சீராக இயங்க வேண்டுமானால் இங்கெல்லாம் ரத்த ஓட்டம் சீராக இருக்க வேண்டும். இவ்விதமான ரத்தமானது இதயத்திலிருந்துதான் சுத்தப் படுத்தப்பட்டு மீண்டும் உடலுறுப்புகளைச் சென்றடைகிறது. இதயம் சீராக இயங்காவிடில் ரத்த ஓட்டம் தடைப்பட்டு நோய் தோன்றும். இதயமே உடலின் மிகவும் முக்கியமான உறுப்பு. இவ்வாறே வேதங்களுடைய இதயஸ்தானத்தில் ராம நாமாவை வைத்து இதன் மூலமாகவே மற்ற மந்திரங்களுக்குச் (உறுப்புகளுக்கு) சக்தி அளிக்கப்படுகிறது என்றும் மந்திரங்களெல்லாம் அன்ன ரஸமானால் இது ரத்தம், மாம்ஸம், மேதஸ், அஸ்தி (எலும்பு), மஜ்ஜை, சுக்ரம் எனும் (வீர்யமான) ஸாரமாக, கடைசி நிலையாக உடலுக்கு நிலைப்புத் தன்மையை அளிப்பதாக உள்ளதுபோல் 'ராம' நாமம் அம்ருதத்திற்கு ஒப்பான உயிர் காக்கும் மருந்தாக கருதப்பட வேண்டும்.

Koviloor Digital Library

நாராயண தந்த்ரம்

ये गृह्णन्ति निरन्तरं परपदं रामेति वर्णद्वयं
तेवैभागवतोत्तमाः सुखमयाः पूज्यास्तु ते सर्वदा।
ते निस्तीर्य भवार्णवं सुतकलत्राद्यैस्तु नक्रैर्युतं
तृष्णावारिसुदुस्तरं ह्यविकलं सायुज्यमायान्ति वै।।

யே க்ருஹ்ணந்தி நிரந்தரம்
    பரபதம் ராமேதி வர்ணத்வயம்
தேவை பாகவதோத்தமாஸ் ஸுகமயா:
    பூஜ்யாஸ்துதே ஸர்வதா।
தே நிஸ்தீர்ய பவார்ணவம்
    ஸுத கலத்ராத்யைஸ்து நக்ரைர்யுதம்
த்ருஷ்ணா வாரி ஸுதுஸ்தரம்
    ஹ்யவிகலம் ஸாயுஜ்ய மாயாந்திவை ॥

பதவுரை:

யே	-	எவர்கள்
பரபதம்	-	(உயர்ந்த நிலையை அளிக்கவல்லதும்) உயர்ந்த சொல்லாகவும் விளங்கக் கூடியதுமான
ராம இதி	-	'ராம' என்கிற
வர்ணத்வயம்	-	இரண்டெழுத்தை
நிரந்தரம்	-	இடைவிடாது
க்ருஹ்ணந்தி	-	தன்னைக் காக்கவும், உயர்த்தவும் வல்லது என்று நம்பி ஏற்கிறார்களோ
தே வை	-	அவர்களே

Koviloor Digital Library

பாகவதோத்தமா:	-	இறைவனுடைய ப்ரியத்திற்குப் பாத்திரமான உயர்ந்த பாகவதர்களாகவும்
ஸுகமயா:	-	சுகமயமானவர்களாகவும்
தே ஏவ து	-	அவர்களே
பூஜ்யா: (பவேயு:)	-	பூஜிக்கத் தக்கவர்களாகவும் ஆவர்
தே வை	-	அவர்களே
த்ருஷ்ணாவாரி	-	பேராசை, பொறாமை, கோபம்,
தாபம் ஸுதுஸ்தரம்		போன்ற குணங்களால் கரையேற்ற முடியாத நிலையில் உள்ளதும்
ஸுத கலத்ராத்யை:	-	பிள்ளை,பெண்டாட்டி,அண்ணன், தம்பி எனும் ஸம்ஸாரமாகிய குடும்பத் தளைகளாகிற
நக்ரை:	-	முதலைகளால்
யுதம்	-	கூடியிருக்கிறதுமான
பவார்ணவம்	-	ஸம்ஸாரமாகிய பெருங்கடலை
நிஸ்தீர்ய	-	நன்கு ஸுலபமாக சிரமமின்றி கடந்து
அவிகலம்	-	குறையில்லாத, திரும்பி வருதல் இல்லாத
ஸாயுஜ்யம்	-	ஸாயுஜ்யமெனும் வைகுண்டத்தில் மஹாவிஷ்ணுவின் அருகாமையை
ஆயாந்தி ஹி	-	அடைகிறார்கள் அன்றோ!

தெளிவுரை:

நம்பிக்கைதான் வாழ்க்கையின் ஆதாரம். இந்த வகையில் ராம நாமம் எனும் இரண்டெழுத்தை எவர்கள் நிச்சயமாக தன்னைக் கரையேற்றத் தக்கதாக நம்பி ஏற்பார்களோ அவர்களே இறைவனுக்குப் பிரியமானவர்கள். 'அனன்யா: சிந்தயந்தோமாம்' என்று கூறப்படுகிற வகையில் அவர்களை இறைவன் கைவிடுவதில்லை. இவ்விதமான

Koviloor Digital Library

பக்தர்கள் போட்டி, பொறாமை, கள்ளம், கபடம், சூது, வாது, பேராசை, அசூயை போன்ற கீழான குணங்களாகிற சேற்றால் நிரம்பியிருந்தாலும் பிள்ளை, பெண்டாட்டி போன்ற உறவினர்களுடைய ஸம்பந்தத்தினால் தளைப்படுத்தும் சம்ஸாரம் என்னும் பெருங்கடலை சுலபமாக சிரமமின்றி கடந்து வைகுண்டத்தில் ஸ்ரீமன் நாராயணனுடைய அருகாமையை அடைந்து அவனுடனே கலந்து கரைந்து விடுகிறார்கள் என்று தெளிக. அவர்கள் மறுபடியும் பிறப்பதில்லை.

ஸம்மோஹன தந்த்ரம்

प्राणात्प्रियतरं मह्यं राम नाम सदा प्रिये ।
क्षणं विहातुं शक्तोऽस्मि नैव देवि कदाचन ॥

ப்ராணாத் ப்ரியதரம் மஹ்யம் ராம நாம ஸதா ப்ரியே ।
க்ஷணம் விஹாதும் சக்தோஸ்மி நைவதேவி கதாசன ॥

பதவுரை:

ப்ரியே தேவி	-	*ஏ ப்ரியமான தேவியே! (பார்வதியே!)*
மஹ்யம்	-	*(பரமேச்வரனான) என் பொருட்டு*
ராம நாம	-	*ராம நாமாவானது*
ஸதா	-	*எப்பொழுதும்*
ப்ராணாதபி	-	*(எனது) உயிரைக் காட்டிலும்*
ப்ரியதரம்	-	*மிகவும் அதிகம் ப்ரியமானது*
கதாசன	-	*எப்பொழுதும்*

Koviloor Digital Library

க்ஷணமபி	-	*ஒரு நொடிப் பொழுதுகூட*
விஹாதும்	-	*(அந்த ராம நாமாவை) விடுவதற்கு, நீங்குவதற்கு*
நைவ சக்த:	-	*சக்தி இல்லாதவனாக.*
அஸ்மி	-	*இருக்கிறேன்.*

தெளிவுரை:

மனிதர்களுக்கு மிகவும் ப்ரியமானது மனைவியோ, மக்களோ அல்ல. தனது உயிர்தான் எல்லாவற்றையும்விட ப்ரியமானது. தனது உயிரைக் காத்துக்கொள்ள தனது மனைவி மக்களைக்கூட த்யாகம் செய்துவிடத் துணிவது மனித இயல்பு. உபநிடதத்தில் கூட 'தன்து விருப்பத்திற்கு அனுகூலமாக இருப்பதற்காகத்தான் மனைவியையோ மக்களையோ மனிதன் விரும்புவான். மனைவிகூட தனது விருப்பத்திற்கு உறுதுணையாக வேண்டித்தான் கணவனையோ, பிள்ளைகளையோ விரும்புவாள். அதாவது கணவனுக்காக கணவன் மேலோ, மனைவிக்காக மனைவிமேலோ மனிதர்களுக்கு ஸ்நேஹம் பிறப்பதில்லை. தனது சுய விருப்பத்திற்கு அனுகூலமாக இருப்பதற்குத்தான் உலகில் சொந்தங்கள், உறவுகள் ஏற்படுத்தப் படுகின்றன என்பது உபநிஷதக் கருத்து. இது இவ்வாறிருக்க இங்கு பரமசிவனார் பார்வதியிடத்தில் கூறும்போது தனது உயிரைக் காட்டிலும் ராம நாமாவை உயர்த்தி அதை புறந்தள்ள முடியாது என்று கூறுவது ராம நாமாவின் மகிமையை நமக்கு உணர்த்தும். இந்த உலகமே இயங்குவது 'ராம' எனும் நாமமாகிற மூச்சுக் காற்றாலேதான் என்றும் அது இல்லாமல் ஒரு கணம்கூட உலகம் இயங்க முடியாதென்பதையும் தெளிவோமாக.

Koviloor Digital Library

மந்த்ர மஹோததி:

असारतरसंसारसागरोद्धारकारकम्।
हारकं दुःख जालानां श्रीरामेत्यक्षरद्वयम्।।

அஸாரதர ஸம்ஸார ஸாகரோத்தார காரகம் ।
ஹாரகம் து:க்க ஜாலானாம் ஸ்ரீ ராமேத் யக்ஷரத்வயம் ॥

பதவுரை:

ஸ்ரீராம இதி	- ஸ்ரீ 'ராம' எனும் இரண்டெழுத்து மந்திரமானது
அஸாரதர ஸம்ஸார	- ஸாரம் சிறிதளவும் இல்லாத ஸம்ஸாரமாகிற
ஸாகரோத்தார காரகம்	- கடலைத் தாண்டுவிப்பதாயும்
து:க்க ஜாலானாம்	- ஆசை, கோபம், பேராசை, மதிமயக்கம், மதமதப்பு, பிடிவாதம் போன்ற துக்கத்தை மட்டுமே தரவல்ல மாய வலைகளை
ஹாரகம்	- நீக்குவதாயும்
பவதி	- இருக்கிறது.

தெளிவுரை:

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் எனும் ஐந்து விஷயங்களின் வழியாக நமது காது, சருமம், கண், நாக்கு, மூக்கு போன்ற புலன்கள் நம்மை (ஜீவாத்மாவை) சம்ஸாரம் எனும் சங்கிலியால் கட்டிப் போடுகின்றன. இவற்றால் கட்டுண்டு நாம் நமது பிறப்பின் லக்ஷ்யமான மோக்ஷப்பேறை நினைத்துக்கூட பார்க்க முடிவதில்லை. ஆனால் இந்திரியங்கள் ஒவ்வொன்றாக செயலிழந்து போய் முடங்கிப் போகும் காலத்தில் ஜீவன் இச்சம்ஸாரத்தில்

Koviloor Digital Library

த்ருப்தியுறாமல் மனம் வெதும்பிப் போகிறான். இப்படி இவன் ஸம்ஸாரத்தில் கட்டுண்டு கிடப்பதற்கு முதல் காரணம் இவனைத் தவிர வேறொரு பொருள் உலகில் இருப்பதாகவும் அதை இவன் அடைந்தால்தான் ஸந்தோஷம் ஏற்படும் என்றும் இவன் நினைப்பதே. இரண்டாவதாக ஒரு பொருள் இருப்பதாக இவன் நினைப்பதற்கு இவனது அஞ்ஞானமே காரணம். வாஸ்த்தவத்தில் இவன் ஒருவனே உலகில் உள்ளான். இவன் பரம்பொருளின் அம்சமே. இவனும் பரம்பொருளும் வெவ்வேறல்ல. ஆனாலும் கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்த்து வேறொரு மனிதன் இருப்பதாக நினைப்பது எவ்வளவு அஞ்ஞானமோ அவ்வளவு அஞ்ஞானமிது. இவனது கோபதாபங்கள் அனைத்தும் மற்றது ஒன்று இருக்கிறது எனும் நினைப்பால் மட்டுமே தோன்றுகின்றன. ராம நாமமாகிற இரண்டெழுத்தானது இம்மாய வலையை அறுத்து சம்ஸாரத்தளையிலிருந்து இவனை விடுவித்து இவனை ஸ்வதந்திரமானவனாகச் செய்கிறது. இந்த சுதந்திரம்தான் மோக்ஷம். அதற்கான கருவி ராம நாமமே என்று இச்செய்யுளுக்குப் பொருள் கொள்க.

Koviloor Digital Library

கோவிந்தபுரம் ஜகத்குரு
ஸ்ரீ பகவன் நாம போதேந்ரசரஸ்வதி
ஸங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள்

यन्नामकीर्तनादेव दग्धदुर्जातिकिल्बिषः।
कि रातोऽभून्मुनिश्रेष्ठः वाल्मीकिरिति विश्रुतः॥

யந் நாம கீர்த்தனாதேவ தக்ததுர்ஜாதி கில்பிஷ: ।
கிராதோऽபூன் முனிச்ரேஷ்ட: வால்மீகிரிதி விச்ருத: ।

பதவுரை:

யந் நாம கீர்த்தனாதேவ	-	எந்த 'ராம' எனும் நாம ஸங்கீர்த்தனத்தால் மட்டுமே
தக்ததுர்ஜாதி கில்பிஷ:	-	கொலை எனும் இழிவானத் தொழிலால் ஏற்பட்ட பாவத்தை உடைய
கிராத:	-	(ரத்னாகரன் எனும்) வேடனானவன்
வால்மீகி: இதி	-	வால்மீகி என்று
விச்ருத:	-	மிகவும் பிரசித்தி பெற்ற
மஹர்ஷி:	-	மஹர்ஷியாக, தவயோகியாக
ஆபூத்	-	ஆனான்.

தெளிவுரை:

தபஸ் எனும் சொல்லுக்கு 'சூடு', 'உஷ்ணம்' என்று பொருள். ஒரு செயலை இடைவிடாமல் செய்யும்பொழுது நமது உடல் சூடாகி விடுகிறது. இரவு கண்விழித்து ஏதாவது செய்தால் மறுநாள் உடலில் உஷ்ணத்தினால் பித்தம் அதிகமாகி நோயை வரவழைக்கும். இவ்வாறு எதையும் தொடர்ந்து செய்வதால் உஷ்ணம் அதிகரிக்கும் என்பது இயற்கை. மந்திரங்களின் உச்சாரமானது தீவிரமாகும்போது பாவங்கள் எனும் அழுக்குகள் அம்மந்திரத் தீயால் எரிந்து சாம்பலாகி போகும்.

Koviloor Digital Library

कायेन्द्रियशुद्धिः अशुद्धिक्षयात्तपसः

காயேந்த்ரியஶுத்தி: அசுத்திக்ஷயாத்தபஸ:

என்று பாதஞ்ஜலயோக ஸூத்ரம் 2.43-ல் தவமிருப்பதால் உடலும், உறுப்புகளும் சுத்தி அடைவதாகக் குறிப்பிடுகிறார் பதஞ்சலி முனிவர். இவ்வாறே வால்மீகி முனிவர் தனது வாழ்க்கையில் வேடுவகுலத்தில் பிறந்து எல்லா ஜந்துக்களையும் ஹிம்ஸித்து பாவத் தொழில் புரிந்து வந்திருந்தாலும் நாரத மஹர்ஷியின் உபதேசத்தால் ராம எனும் நாமத்தை இடைவிடாமல் உச்சரித்து வந்து அதன்மூலம் அவர் தம் பாவங்கள் முழுவதுமாக எரிக்கப்பட்டவுடன் தூயவராக மாறியதால் மகரிஷியாகவே மாறி 'ராமாயணம்' எனும் உயர்ந்த புண்யமான இதிஹாஸத்தை நமக்களித்திருக்கிறார். ஆகவே 'ராம' நாம ஜபம் எனும் தவமானது நமது பாவங்களையெல்லாம் சுட்டெரித்து நம்மைத் தூயவனாக்கும் என்று தெளிக. இவ்வாறே எவ்விதமாக செய்த பாவமும் ராம நாமாவால் ...தாலையும் என்றும் அறிக.

ஸ்ரீ லக்ஷ்மீதரர்

आकृष्टीकृतचेतसां सुमहतामुच्चाटनं चांहसाम्
आचण्डालममूकलोकसुलभो वश्यच्च मोक्षश्रियः।
नोदीक्षां नच दक्षिणां नच पुरश्चर्यां मनागीक्षते
मन्त्रोऽयं रसनास्पृगेव फलति श्रीरामनामात्मकः।।

ஆக்ருஷ்டீ க்ருத சேதஸாம்
ஸுமஹதா முச்சாடனம் சாம்ஹஸாம்
ஆசண்டாள மமூகலோக
ஸுலபோ வஶ்யஶ்ச மோக்ஷ ஶ்ரிய: ।

நோ தீக்ஷாம் ந ச தக்ஷிணாம்
ந ச புரஸ்சர்யாம் மனாகீக்ஷதே
மந்த்ரோயம் ரஸ நாஸ்ப்ருகேவ
பலதி ஸ்ரீ ராமநாமாத் மக: ॥

பதவுரை:

ஸ்ரீ ராம நாமாத்மக: - ஸ்ரீ ராம நாமம் எனும்
அயம் மந்த்ர: - இந்த மந்திரமானது
க்ருத சேதஸாம் - (தூய) உள்ளம் படைத்தவர்களுக்கு
ஆக்ருஷ்டி - கவர்ச்சிகரமானதாகவும்
ஸுமஹதாம் - மிகவும் பெரியதானதும், தாங்கமுடியாததுமான
அம்ஹஸாம் - பாவங்களை
உச்சாடனம் - நீக்கவல்லதும்
ஆசண்டாளம் - பண்டிதர் முதல் பாமரர் வரை கடைநிலையில் உள்ளவர்வரை
அமூகலோகஸுலப:- பேச்சுத்திறன் கொண்டவர்களுக்கு உச்சரிக்க எளிதாகவும்
மோக்ஷ ஶ்ரிய: - மோக்ஷ லக்ஷ்மியை (விரும்புகிறவர்களுக்கு)
வஶ்ய: - (அதை) வசப்படுத்த உதவுவதாயும்
ரஸநா ஸ்ப்ருகேவ - நாவில் (உச்சரிக்கப்படுவதற்காக) தொட்டவுடனே / பட்டவுடனே
பலதி - பலிக்கிறது (நினைத்த விருப்பத்தை நிறைவேற்றுகிறது)
தீக்ஷாம் - (இவ்விதம் பலனை அடைவதற்காக) கடினமான தீக்ஷையையோ,

Koviloor Digital Library

தக்ஷிணாம்	-	ப்ராம்மணர்களுக்கு அளிக்கத்தக்க தக்ஷிணையையோ
புரஶ்சர்யாம்	-	உடலளவில் செய்யப்பட வேண்டிய ஆசார அனுஷ்டானங்களையோ
மனாகபி	-	சிறிதுகூட
நோ ஈக்ஷதே	-	எதிர்ப்பார்பதில்லை.

தெளிவுரை:

ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிப்பதென்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததல்லவா. இவ்விதம் ஒரே ராம நாமம் பாவங்களைப் போக்குவதாகவும், உச்சரிக்க சுலபமாகவும், அதிக நியமங்களை எதிர்பாராததாகவும், உச்சரிக்கத் தக்க வகையில் எளிதில் கவர்ந்திழுக்கக் கூடியதாகவும் நாக்கில் பட்டவுடனே பலன் அளிப்பதாகவும் இருப்பது என்பது ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிப்பது போன்றதே. ஒன்றையடைய பல முயற்சிகளை செய்ய வேண்டியதாக உலகில் அனைத்தும் காணப்படும்போது பலதை அடைய ஒரே முயற்சியாக அமைந்திருப்பது இந்த ராம நாமமே.

ஸ்ரீதர வெங்கடேஶ ஐயாவாள்

अयन्ते विश्रान्तिं निगमनिकरा यत्रपरमां
यदाऽऽनन्दोदन्यत्पृषतलवतुष्टा विधिमुखाः ।
महेशोजिह्वयाः क्षणमपि सनैवोज्झितुमलं
ननुत्वां रामाख्य तव मधुरतां वर्णयतु कः ।।

Koviloor Digital Library

அயந்தே விஶ்ராந்திம்
நிகம நிகராயத்ரபரமாம்
யதாऽऽநந்தோ தன்வத்
ப்ருஷதலவ துஷ்டா விதிமுகா: ।
மஹேஶோ ஜிஹ்வாயா:
க்ஷணமபி ஸநைவோஜ்ஜிது மலம்
நநு த்வாம் ராமாக்ய
தவ மதுரதாம் வர்ணயது க: ॥

பதவுரை:

யத்ர	-	(எந்த ராம நாமத்தில்) எங்கு
நிகமநிகரா	-	வேத மந்திரங்களின் கூட்டங்கள் (தனது பொருளைத் தெரிவிப்பதில்)
பரமாம் விஶ்ராந்திம்	-	இனிமேல் அதிகப்படியாகவோ, வேறானதாகவோ கூற முடியாமல் ஓய்வை
அயந்தே	-	அடைகின்றதோ
விதிமுகா:	-	ப்ரம்மா முதலிய தேவர்கள்கூட
யதாநந்தோ தன்வத் ப்ருஷதலவதுஷ்டா:	-	எந்த ராம நாமாவைஉச்சரிப்பதால் ஏற்படும் ஆனந்தக் கடலில் சிறிய நீர்த்திவலைகளாலேயே மிகவும் மகிழ்ச்சியுற்று இருக்கிறார்களோ,
ய: ஸ:	-	எந்த அந்த
மஹேஶ:	-	பரமசிவன் கூட
ஹே! ராமாக்ய!	-	ஏ 'ராம' எனும் நாமமே!
த்வாம்	-	உன்னை
க்ஷணமபி	-	ஒரு கணம்கூட
ஜிஹ்வாயா:	-	தனது நாக்கிலிருந்து

Koviloor Digital Library

உஜ்ஜிதும்	-	நீக்குவதற்கு
நைவ அலம்	-	சக்தியற்றவராய் இருக்கின்றாரோ
தா த்ருஶஸ்ய	-	அப்படிப்பட்ட
தவ	-	உன்னுடைய
மதுரதாம்	-	இனிமையை, இனிப்புத் தன்மையை
க:	-	எவன்தான்
வர்ணயது	-	வர்ணிக்கட்டும்? (யாரும் வர்ணிக்க முடியாது என்று பொருள்)

தெளிவுரை:

வேதங்களுடைய கருத்துக்கள் கர்மாவை அனுஷ்டிப்பதில் ஆரம்பித்தாலும் முடிவில் வேதாந்தமான உபநிஷதங்களில்தான் அவைகளது உண்மையான பொருள் இருப்பதாகக் காணப்படுகின்றன. இவ்வுபநிடதங்களும் கூட தனது முடிவான பரம்பொருளே இவ்வுலகத்தை தன் வடிவிலேயே ஸ்ருஷ்டித்திருப்பதாகவே கட்டியம் கூறுகின்றன. அப்படி எங்கும் நீக்கம் இன்றி நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்தால் அது 'ராம' எனும் நாமமாகவே பரிணமிக்கிறது. இதைத் தவிர வேறெதையும் பொருளாக வேதங்களால் கூற முடிவதில்லை. இதை விட்டால் ப்ரம்மா முதலியவர்களுக்கு ஆனந்திப்பதற்கு வேறு வழியில்லை. தனது மூச்சுக் காற்றாகவே விளங்குவதால் சிவன்கூட ஒரு கணமேனும் இதை நீக்கி இருக்க முடிவதில்லை. இப்படிப்பட்ட 'ராம' நாமாவின் இனிமை, அருமை, பெருமைகளை வாக்கினால் யாரால்தான் கூற இயலும்? ஒருவராலும் முடியாது என்பதே உண்மை. அடிமுடி காண முடியாத அனாதியான வஸ்துவாக இருப்பதால்தான் இவ்வாறு இருக்கிறது.

Koviloor Digital Library

ஸ்ரீ ராம கர்ணாம்ருதம்

जयतुजयतु मन्त्रः जन्मसाफल्यमन्त्रः जननमरणभेदक्लेशविच्छेदमन्त्रः।
सकलनिगममन्त्रः सर्वशास्त्रैकमन्त्रः रघुपतिनिजमन्त्रः रामरामेति मन्त्रः॥

ஜயது ஜயது மந்த்ர: ஜன்மஸாபல்ய மந்த்ர:
ஜனன மரண பேதக்லேச விச்சேத மந்த்ர: ।
ஸகல நிகம மந்த்ர: ஸர்வ சாஸ்த்ரைக மந்த்ர:
ரகுபதி நிஜமந்த்ர: ராமராமேதி மந்த்ர: ॥

பதவுரை:

ஸ்ரீ ராம ராம இதி - ஸ்ரீ ராம ராம எனும்
மந்த்ர: - மந்திரமானது
ஜன்ம ஸாபல்ய மந்த்ர:- ஜன்மாவின் பெரும்பயனான முக்தியை அளிக்கவல்ல மந்திரமாக இருக்கிறது
ஜனன மரண பேதக்லேச- விச்சேத மந்த்ர: பிறப்பு, இறப்பு எனும் இரு நிலைகளாலும் ஸம்ஸாரத்தில் தவிக்கும் ஜீவன்களுக்கு அதை நீக்கத் தகுந்ததாயும்
ஸகல நிகம மந்த்ர: - அனைத்து வேதங்களாலும் தனது ஸாரமாக கூறப்படுவதாயும்
ஸர்வ ஶாஸ்த்ரைக மந்த்ர: - அனைத்து சாஸ்திரங்களாலும் தனது முடிவாகத் தெரிவிக்கத் தக்கதாக உள்ளதான மந்திரமாகிய இந்த
ரகுபதி நிஜ மந்த்ர: - ரகுகுலத் தர்சனான ஸ்ரீராமனது உண்மையான நாமாவான இந்த ராம நாமாவானது
ஜயது ஜயது - எப்பொழுதும் ஜயிக்கட்டும் ஜயிக்கட்டும்.

203
Koviloor Digital Library

தெளிவுரை:

आकाशत्पतितंतोयं यथागच्छतिसागरम् ।
सर्वदेवनमस्कारः केशवं प्रतिगच्छति ।।

ஆகாஶாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம் ।
ஸர்வதேவ நமஸ்கார: கேஶவம் ப்ரதிகச்சதி ॥


என்று மேகத்திலிருந்து பெய்யும் மழை எங்கு விழுந்தாலும் முடிவில் கடலை எவ்வாறு அடையுமோ, அவ்வாறே வேத சாஸதிரங்களின் எந்த பொருள் சாதாரணமாகக் கூறப்பட்டிருந்தாலும் அவைகளின் முடிந்த முடிவாக, ஸித்தாந்தமாக விசேஷமாக காணப்படும் பொருளானது ராம நாமமே. இந்த நாமமே நமது மாயப் பிறப்பை இறப்பை அறுத்து எறியும் கோடாலி. இவ்வாறு ரகுபதியான ஸ்ரீ ராமனது நாமாவானது உலகில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும். அதனால் உலகமும் வாழ்ந்து கொண்டே இருக்கும். இவ்வுலகில் வெற்றிக்கு ராம நாமாவை விட்டால் வேறு வழியில்லை. ராம நாமம் வாழும்வரை நாம் வாழ்வோம். அது (ராம நாமம்) வாழும். நாமும் வாழ்வோமாக.

சுபம்

KOVILOOR ANDAVAR
Acc. No. 44650
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஸ்ரீ பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்
ராம மந்திரம், 2/3, விநாயகம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.
போன் : 044 - 24893736. web: www.namalayam.org www.ramanamabank.org
e-mail: rama@ramanamabank.org/ramamanthiram@gmail.com